**Tiaano** Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## MAN OF THE MONTH



**Mr. P. Gopalakrishnan**
**Sr. Fitter - Production**

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 100% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Apr. 12 : 562 Nos.
  - Up to Mar. 12 : 546 Nos.
- **Performance Apr. 12 ...**
  - Turnover growth : 0.50%
  - Employment growth : - 1.65%
  - 100% Attendance : 14.59%


## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen Green – HHO Generators
- Titanictrade We Deliver Value Chain – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)

## ACHIEVEMENT




### நாணல்!!

தென்றல் வீசிக் கொண்டிருந்தது. தோட்டத்திலுள்ள மரங்கள் புற்களையும், நாணலையும் பார்த்து “பலமற்றுப்போய் தென்றலுக்கெல்லாம் அசைந்து கொடுக்கிறாய்?” என்று ஏளனம் செய்தன. மறுநாளே சூரைக் காற்று வீச ஆரம்பித்தது. மரங்கள் ‘மளுக் மளுக்கென்று முறிந்து விழுந்தன.

அப்போது நாணல், “மரங்களே நீங்களும் என்னைப்போல் வளைந்து கொடுக்கப் பழகியிருந்தால் இப்படி வேரோடு சாய்ந்திருக்க மாட்டீர்களே! நாங்களும் உபயோகமானவர்களே! ஆற்று நீர் கரையை அரிக்காமல் தடுக்கிறோம் இல்லையேல், நீங்களெல்லாம் கம்பீரமாக நிற்க முடியாது. உருவில் சிறியதான எறும்பு தும்பிக்கைக்குள் நுழைந்து கடித்தால் யானையாலும் தாங்கமுடியாது” என்றது. மரங்களால் எதுவுமே பேச முடியவில்லை.

அதனால் நான் இவ்வளவு படித்திருக்கிறேன், எனக்கு இவ்வளவு சொத்துக்கள் இருக்கிறது. நான் மிகவும் பெரியவன், நான் எவருக்கும் அடங்கியிருக்க மாட்டேன் என்று எவரையுமே அலட்சியப்படுத்தக் கூடாது. அச்சாணி சிறியதுதான். ஆனால் அது இல்லாவிட்டால் வண்டி ஓடாதே! வளைந்து கொடுத்து வாழப் பழகினால் நாணல் போல் நிலைத்திருக்கலாம்.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

### Un - Selfishness

Story about Saint Peter. He was taking a visitor to the next world on a tour. First they came to hell. It was like a big dining room with long tables all loaded with food. And still, everyone seemed skinny and half starved.

They had a special way of eating here in hell: each one had a spoon with a handle which was two meters long. Now when the guest visited heaven he noticed that they had the same system of eating in their dining room. But here everyone seemed well fed.

Noticing this, the visitor asked Saint Peter for the reason. "Well," he explained, "did you notice that in hell everyone tried to feed himself with that long spoon? Well, no one can reach his mouth, and so they are all starving. But in heaven everyone feeds everyone else with those long spoons. And so, everything goes just fine.

We think of the other person first and of ourselves, last.

Compiled by : Mr. C. Abilash
Facilitation

## FUNCTIONAL WISHES



**Father's Day**
**17th June**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel:22294565<br>M/s. Jeya Clinic,<br>Tel: 98408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | | |
|---|---|---|
| **Mr. S. Samuvel** | Admin | 03rd June |
| **Mr. S. Sivakumar** | Marketing | 04th June |
| **Mr. A. Rathinam** | Fib Tec | 04th June |
| **Mr. M. Suyambu** | Tiaano Vidyashrm | 05th June |
| **Mr. V. Satheesh** | Production | 05th June |
| **Mr. K. Kanthan** | Store | 05th June |
| **Mr. A. Immanuel Thamburaj** | Production | 06th June |
| **Mr. S. Sri Ganesh** | Production | 06th June |
| **Mr. P. Ravi** | Coating | 06th June |
| **Ms. V. Rajakumari** | Coating | 07th June |
| **Mr. A. Sekar** | Production | 09th June |
| **Mr. G. Muthu** | Production | 10th June |
| **Mr. C. Babu** | Finance | 10th June |
| **Mr. R. Narayanan** | Fib Tec | 11th June |
| **Mr. M. Sreetharan** | Production | 12th June |
| **Ms. T. Jayalatha** | Finance | 15th June |
| **Mr. R. Benjamin Michael** | Production | 19th June |
| **Mr. G. Jeevanantham** | Coating | 20th June |
| **Mr. A. Manikantan** | Coating | 20th June |
| **Mr. T. Rajakumaran** | Coating | 22nd June |
| **Mr. G. Balachandran** | R & D | 22nd June |
| **Mr. G. Gnasekaran** | Prodution | 22nd June |
| **Mr. S. Pavithran** | Design | 23rd June |
| **Mr. P. Gopalakrishnan** | Production | 26th June |

**Best Wishes from Tiaano Employees**

### கான்.:.பிடன்ஸ் கார்னர்

ஒரு பெரிய கூட்டத்தில் துறவியொருவர், பேசிக் கொண்டிருந்தார். ஒரு பெண் தன் குழந்தையைக் கொண்டு வந்து ஆசிகோரினாள். சில சொற்கள் சொன்னார் துறவி. அங்கிருந்த ஒருவர், "சில வார்த்தைகள் அந்தக் குழந்தைக்கு என்ன செய்துவிடும்" என்று கேலியாகக் கேட்டார். உடனே அந்தத் துறவி கடுமையான வசவுச் சொற்களால் கேலி செய்தவரை திட்டினார். உடல் பதறி சீறி எழுந்தார் கேலி செய்தவர்.

அடுத்த விநாடியே அந்தத் துறவி "சில தீய வார்த்தைகள் உன்னைப் பதறச் செய்ததில்லையா! அதைப் போல நல்ல வார்த்தைகள் நன்மை செய்யும்" என்று சொன்னார்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### உங்கள் வாகனத்துக்கு பெட்ரோல் நிரப்பப் போகிறீர்களா....?

உங்கள் வாகனத்துக்கு பெட்ரோல் நிரப்பும் முன் கீழே உள்ள தகவல்களைப் பற்றிச் சிந்தியுங்கள்...!!!

எல்லா பெட்ரோல் பம்புகளும் தங்கள் சேமிப்புத் தொட்டிகளை நிலத்துக்கு அடியில் பதித்து வைத்திருக்கின்றன.

நிலத்தின் வெப்பநிலை குளிர்ச்சியாக இருக்கும் போதே எரிபொருள் அடர்த்தியுடன் இருக்கும். வெப்பநிலை அதிகரிக்கும்போது, பெட்ரோல் விரிவடையும். எனவே, மதியம், மாலையில் நீங்கள் ஒரு லிட்டர் பெட்ரோல் வாங்கினால், அது மிகச்சரியாக ஒரு லிட்டர் இருக்காது. எனவே, நிலத்தின் வெப்பநிலை குளிர்ச்சியாக இருக்கும் அதிகாலை நேரங்களில் வாகனத்துக்கு பெட்ரோல் நிரப்புங்கள்.

பெட்ரோல் வணிகத்தில் வெப்ப அளவும், அடர்த்தியும் மிக முக்கியமானவை. பெட்ரோல் ஒரு டிகிரி அதிக வெப்பநிலையில் இருந்தால் அது மிகப் பெரிய மாற்றம். ஆனால் பெட்ரோல் பங்கில் இதுபோன்ற கட்டுப்பாடுகள் பார்க்கப்படுவதில்லை.

அதேபோல உங்கள் வாகனத்தின் பெட்ரோல் தொட்டியை எப்பொழுதும் முழுமையாக நிரப்பாதீர்கள். அதனால் உங்களுக்கு நஷ்டமே ஏற்படும். பாதி மட்டுமே நிரப்புங்கள். அதிக எரிபொருள் இருந்தால், அந்தத் தொட்டியில் காற்று குறைவாகவே இருக்கும். நாம் நினைப்பதைவிட வேகமாக பெட்ரோல் ஆவியாகக் கூடியது.

பங்கின் பெட்ரோல் சேமிப்புத் தொட்டிகளில் மிதக்கும் கூரைகள் இருக்கும். இதன் காரணமாக உள்ளே பெட்ரோலுக்கும் காற்றுமண்டலத்துக்கும் இடையே இடைவெளி இருக்காது. எனவே ஆவியாதல் குறையும். வாகன பெட்ரோல் தொட்டியில் பாதி நிரப்பினால், பெட்ரோல் ஆவியாவதை ஓரளவு குறைக்க முடியும்.

அதேபோல் நீங்கள் பெட்ரோல் நிரப்பப் போகும் போது தான், அந்த பங்கில் லாரியில் இருந்து பெட்ரோல் இறக்கப்படுகிறது என்றால், அப்போது வாகனத்துக்கு பெட்ரோல் நிரப்பாதீர்கள். கிடங்கின் அடியில் தேங்கியிருந்த கசடுகள் அப்போது கலங்கி இருக்கும். இது எஞ்சினை பாதிக்கும்...

Compiled by : S. Mathikrishnan
Projects

## தெரிந்து கொள்வோம்

### Amazing things that happen online every 60 seconds

| | | |
|---|---|---|
| Face book status updates | : | 6,95,000 |
| Videos uploaded on You Tube | : | 600 |
| Search queries on Google | : | 6,94,445 |
| Questions asked on answers.com | : | 100 |
| Firefox downloads | : | 1,700 |
| Windows 7 CDs sold | : | 450 |
| USB devices sold | : | 4,000 |
| Ink Cartridges sold | : | 2,500 |
| Websites hacked | : | 12 |
| E-waste generated | : | 38 tone |
| Comments on Facebook | : | 5,10,000 |
| Emails sent | : | 168 million |
| Conversations on instant messengers | : | 11 million |
| Questions asked on yahoo | : | 40 |
| Computers sold | : | 710 |
| Blackberry sold | : | 103 |
| Purchase on eBay.com | : | 950 |
| Computers infected | : | 232 |
| Pay Pal Payments | : | 2,19,000 |

Image : 1,100 acres of land is farmed on Farmville every minute.

Collected in Internet

### குளிரெடுப்பதற்கான காரணம்.

குளிரெடுக்கும்போது நம் உடல் நடுங்குகிறதன் காரணம் தெரியுமா? மூளைக்கு அடியில் இருக்கும் 'ஹைபோதலாமஸ்' என்ற ஒன்று உஷ்ணம் குறைவாக இருப்பதை உணர்கிறது. உடனே தைராய்டு சுரப்பிற்கு செய்தி அனுப்புகிறது. உடனே தைராய்டு சுரப்பி மெடபாலிக் விகிதத்தை அதிகரிக்கிறது. உடனே உடற்தசைகள் சுருங்கி விரிகிறது.

இதன் மூலம் உஷ்ணம் உருவாக்கப்படுகிறது. நரம்புகள் உடனே சருமத்திற்கு செய்தி அனுப்புகிறது. உடனே சருமத்தின் துளைகள் சுருங்குகிறது, இதன் மூலம் உஷ்ணத்தை உடலுக்குள் பாதுகாக்கிறது.

Compiled by : M. Sivakumar
Marketing

### சிறந்த மனிதநேயன்

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தில் உள்ள குண்டுரைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் எர்ணாவூர் மாவட்டத்தில் உள்ள ஆலுவாகடுநல்லூர் என்ற ஊரில் லாட்டரி டிக்கெட் விற்று வருகிறார்.

கடந்த ஜனவரி 21–ம் தேதி, ஐயப்பன் என்ற 60 வயது முதியவர் இவரிடம் லாட்டரி டிக்கெட் வாங்க வந்தார். ஐந்து டிக்கெட் வாங்கியவர், பணம் தரவில்லை. 'இந்த ஐந்து டிக்கெட்டையும் தனியா எடுத்து வெச்சுடுறேன். காலையில் பணத்தைக் கொடுத்துவிட்டு டிக்கெட் வாங்கிக்குங்க' என்று சொல்லியிருக்கிறார் சுரேஷ்.

மறுநாள் லாட்டரிச் சீட்டு குலுக்கல் முடிவில் ஐயப்பனுக்காக சுரேஷ் எடுத்து வைத்த ஐந்து லாட்டரி டிக்கெட்டுகளில் ஒரு டிக்கெட்டுக்கு ஒரு கோடியே நாற்பதாயிரம் ரூபாய் பரிசு கிடைத்தது தெரியவந்தது.

உடனடியாக, அந்த ஐந்து டிக்கெட்டுகளையும் எடுத்துக்கொண்டு ஐயப்பன் வீட்டுக்குச் சென்ற சுரேஷ், அவரிடம் விவரத்தைச் சொல்லி, டிக்கெட்டுக்கான 250 ரூபாய் பணத்தை மட்டும் வாங்கிக் கொண்டு லாட்டரிச் சீட்டுகளை அவரிடமே கொடுத்துவிட்டு திரும்பியிருக்கிறார்.

"நான்தான் பணம் தரலையே டிக்கெட்டை எடுத்துவிட்டு பணத்தையும் நீங்களே வாங்கிக்குங்கனு" ஐயப்பன் சொன்னார். ஆனால், 250 ரூபாய் பணத்தை வாங்கிட்டு டிக்கெட்டை அவர் கையில் திணிச்சுட்டு வந்துவிட்டார் சுரேஷ்.

"கடவுள் நமக்கு இதைக் கொடுக்கலை. அதனால் உரியவங்ககிட்ட இந்தப் பணம் போய்ச் சேர்றதுதான் நியாயம்" என்று சுரேஷும் அவர் மனைவியும் சொன்னாங்க.

இந்த நேர்மைக்காக சுரேஷைக் கேரளாவே கொண்டாடியது.

Compiled by : Dr. G. S. Vishwanath
Technical Consultant

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி XI)

### ஒழுங்கு

இப்படிப் பல விஷயங்களைச் சொல்லமுடியும். இவை எல்லாவற்றின் அடிப்படை, மேஜையின் பயன்பாடு எதுவோ, அதைச் சரியாகச் செய்வதற்குத் தேவையான பொருட்கள் எல்லாம் அதன்மீது இருக்க வேண்டும். அதுவும் கைக்குக் கிடைக்கிற இடத்தில் சரியாக வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இப்படித் தேர்ந்தெடுத்த பொருட்களை ஒழுங்காக அடுக்கி வைக்கும்போது, ஒரு விஷயம் நம்முடைய கண்களை உறுத்துகிறது. இந்த மேஜை ஏன் இத்தனை அழுக்காக இருக்கிறது?

உடனே, கைக்குக் கிடைத்த ஒரு துணியை எடுத்துக்கொண்டு துடைக்க உட்காருகிறோம். எல்லாப் பொருள்களையும் நகர்த்தி வைத்துவிட்டு, மேஜையை நன்கு சுத்தம் செய்துவிட்டு, எல்லாவற்றையும் பழையபடி அடுக்கி வைக்கிறோம்.

இப்போது மேஜை பார்க்கப் பளபளப்பாகவும் ஒழுங்காகவும் மின்னுகிறது. ஆனால், இத்தனை வேலை செய்ததில் முதுகு, கால், கை, இன்னபிற பாகங்கள் பயங்கரமாக வலிக்கின்றன.

## கவிதைகள்

### வெற்றி நிச்சயம்

பூக்கள் உதிர்ந்து விழும் என்பதற்காக
மரங்கள் வருத்தப்படுவதில்லை,
தென்றல் நின்று போகும் என்பதற்காக
மலர்கள் வருத்தப்படுவதில்லை,
நிலவு தேய்ந்து விடும் என்பதற்காக
வானம் வருதப்படுவதில்லை,
பிறகு ஏன் மனிதா!
நீ மட்டும் தோல்வி கண்டு
துவண்டு போகிறாய்?

Compiled by : Mr. M. Kumar
Design

### வாழ்க்கை

நாம் போகும் பாதை மணல் பாதையாக
இருக்க வேண்டும் என்று ஆசைபடலாம்.
ஆனால் ஒரு முள் கூட இருக்கக் கூடாது
என்று ஆசைபடுவது அசட்டுத் தனம்
நல்ல அனுபவம் கிடைக்கும் போது பரவசம்
படனும்,
மோசமான அனுபவம் கிடைக்கும் போது
பக்குவபடனும்.

Collected by : Mr. D.S. Anish
System Admin

### ஹைக்கூ

முடங்கிக்கிடந்தால் சிலந்தியும் சிறை பிடிக்கும்,
எழுந்து நடந்தால் எரிமலையும் வழி விடும்.

Compiled by : Mr. C. Baskaran
Purchase

### அறிவிப்பு

→ நடைபெறவிருக்கும் 10வது அலுவலர் தினவிழாவின் குழந்தைகள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் குழந்தைகளின் பெற்றோர்கள் தத்தம் பெயர்களை திருமதி. ஷாஹின் மணிகண்டன் (webmaster@tianode.com) அவர்களிடம் பதிவு செய்து கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்படிக்கு
விழாக்குழு

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

இந்தக் களைப்புக்கும் வலிக்கும் நாம் வேறு யாரையும் காரணமாகச் சொல்லமுடியாது. ஏனெனில், இத்தனை நாள்களாகப் பொருள்களை இஷ்டப்படி வீசி இறைத்துக் கொண்டிருந்ததால்தானே இந்த மேஜை குப்பையானது?

அந்த ஓர் அலட்சியத்தால்தானே இவ்வளவு கஷ்டப்பட்டுச் சுத்தம் செய்வதும் ஒழுங்குபடுத்துவதும் அவசியமாகியது?

இப்படி ஓர் எண்ணம் தோன்றிய பிறகு, நம்மால் இந்த விஷயத்தில் அலட்சியமாக இருக்கவே முடியாது. இனிமேல் இந்த மேஜையின் மீது அவசியமில்லாத பொருட்களை வைக்கமாட்டேன். இதில் அழுக்கு சேர அனுமதிக்கமாட்டேன் என்று உள்ளே உறுதியாகச் சொல்லிக் கொள்கிறோம்.

இதுபோன்ற ‘கட்டாய’ விதிமுறைகளைப் பின்பற்றுவது ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் சில நாட்களில் இது பழக்கமாகிவிடும்.

அதன்பிறகு, படித்து முடித்த நாளிதழை யாரேனும் மேஜைமீது வீசினால், அந்த அடி நம் நெஞ்சிலேயே விழுந்தாற்போல் வலிக்கும். சட்டென்று அதன்மீது பாய்ந்து, பேப்பரை அங்கிருந்து அகற்றி, உரிய இடத்தில் ஒழுங்காக வைப்போம்.

அதாவது, ஒழுங்குபடுத்துவதையும் சுத்தப்படுத்துவதையும் பின்பற்ற வேண்டிய கட்டாயங்களாக நாம் மதிக்கவில்லை, அவற்றைக் காலப்போக்கில் நமது பழக்கங்களாகவே உருமாற்றிக் கொண்டுவிடுகிறோம். அவையும் நமது வாழ்வின் பகுதிகளாகிவிடுகின்றன.

இதுதான் சார் **5S**!

ஆச்சரியப்படாதீர்கள். செய்ரி, செய்டன், செய்சோ, செய்கெட்ஸு, ஷிஸுகே என்கிற ஐந்து வார்த்தைகளும் சொல்கிற சூத்திங்கள்தான், நமது மேஜை சுத்தமாவதற்கு உதவியிருக்கின்றன.

தொடரும்…

## TIAANO VIDYASHRM SCHOOL – ADMISSION

